இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 63 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 26 – செவ்வாய்க்கிழமை 13 அக்டோபர் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 63 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 26 - Tuesday 13 October 2026 - Madurai 8 Pages ₹ 5.00

கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடும்

மருத்துவப் பணியாளர்கள் மீது போலீஸ் அராஜகம்!

சோபா மாடல் அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக். 13 -

“பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராடவிருந்த பன்னோக்கு மருத்துவப் பணியாளர்களை வீட்டில் வைத்தே கைது செய்வதா?” என்று Sofa Model அரசுக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவமனை பணியாளர்களை காவல்துறையினர் தரதரவென இழுத்துச் சென்று கைது செய்ததால் பதற்றம் நிலவியது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் சுமார் 3 ஆயிரத்து 500 மருத்துவமனை பணியாளர்கள் தற்காலிக அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். பணி நிரந்தரம் உள்ளிட்ட வாழ்வாதாரக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அவர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதற்காக வந்த அவர்களை காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர். இதனால், இருதரப்பினருக்கும் இடையே பயங்கர தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

போலீசார் அனுமதி மறுத்த நிலையில், தடையை மீறி மருத்துவமனை பணியாளர்கள் போராட்டத்தை தொடர முயன்றனர், ஆனால், அவர்களை குண்டுக்கட்டாக தூக்கிச் சென்றும், தரதரவென இழுத்துச் சென்றும் போலீசார் கைது செய்தனர்.

போலீசாரின் அராஜகத்தைக் கண்டித்தும், த.வெ.க. அரசுக்கு எதிராகவும் முழக்கங்களை எழுப்பிய மருத்துவமனை பணியாளர்கள், தங்களின் போராட்டத்தைத் தொடர்ந்தனர். ஆனால், அவர்களை துரத்திச் சென்று காவல்துறையினர் கைது செய்தனர். கழிவறைக்கு சென்றவர்களையும் இழுத்து சென்று கைது செய்த காவல்துறையினர், சாலையோரத்தில்



நின்றவர்களையும் வலுக்கட்டாயமாக கைது செய்தனர்.

இப்போராட்டம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் மேம்பாட்டு சங்கத்தின் தலைவர் பாரதி, த.வெ.க. அளித்த தேர்தல் வாக்குறுதியின் படி பணி நிரந்தரம் செய்யக் கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடத்த திட்ட மிடப்பட்டதாகவும், ஆனால், அமைச்சருக்கு எதிராக பேசியதற்காக தங்களின் போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும் குற்றம்சாட்டினார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு :-

தேர்தல் முறைகேடு களுக்கு எதிராக டெல்லிக்கு போராடச் செல்லும் இளைஞர் களை ஆங்காங்கே கைது செய்யும் ஒனர்களின் பாணி யில்,

பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னைக்கு வந்து போராட விருந்த பன்னோக்கு மருத்துவப் பணியாளர்களை ஆங் காங்கே வீட்டுக்காவலில் வைக்கும் இந்த Sofa Model அரசை வன்மையாக கண்டிக் கிறேன்.

Reels அரசு அராஜகம்!

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மருத்துவப்பணியாளர் களுக்கு தந்த வாக்குறுதி களை எல்லாம் காற்றில் பறக் கவிட்டுவிட்டு, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு போராட் டத்திற்குப் புறப்படும் முன்பே வீட்டில் வைத்து கைது செய் யும் அளவுக்கு இந்த Reels அரசு அராஜகம் செய்வது ஏன்?

விவசாயிகள் - மாணவர் கள் - செவிலியர்கள் என ஜன நாயக வழியில் போராட்டம் செய்யும் எந்தப் பிரிவினரை யும் நேரில் அழைத்துப் பேசா மல் அடக்குமுறையை ஏவுவ தற்குப் பெயர் தான் மாற்றமா?

உடனே விடுதலை செய்ய வேண்டும்!

மருத்துவப் பணிகளின் முதுகெலும்பாக இருக்கும் பன்னோக்கு பணியாளர்களை உடனே விடுதலை செய்து, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த Dummy முதலமைச்சர் முன்வர வேண்டும்.

அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறை வேற் றிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள் கிறேன்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தலைமைச் செயலகத்தில்

அமைச்சர்கள் அறையில் மின்தடை!

சென்னை, அக். 13 -

தலைமைச் செயலகத்தில் அமைச்சர் அறைகளில் நேற்று மின்தடை ஏற் பட்டதால், அதிகாரிகள் அவதிக்குள் ளாகினர்.

சென்னை தலைமைச் செயலகத் தில், அனைத்துத்துறை அமைச்சர்க ளுக்கும் அறைகள் அமைந்துள்ளன. முதலமைச்சர் விஜய் தலைமைச் செய லகத்தில் இருந்தபோது, அமைச்சர் கள் அறையில் மின்வெட்டு ஏற்பட் டது. மின்வெட்டால், அமைச்சர்க ளைச் சந்திக்கவந்த பொதுமக்களும், அதிகாரிகளும் இன்னலுக்குள் ளாகினர்.

இதனிடையே, மின்வெட்டிலும், அமைச்சர் செங்கோட்டையன் அதி காரிகளுடன் ஆலோசனை மேற் கொண்டார்.

தமிழ்நாட்டில் மின்வெட்டே இல்லை என்று கூறும் அத்துறையின் அமைச்சர் நிர்மல்குமார், தலைமைச் செயலகத்தில் ஏற்பட்ட மின்வெ ட்டுக்கு என்ன பதில் கூறப்போகிறார் என்று தலைமைச் செயலகத்திற்கு வந்த மக்கள் கேள்வி எழுப்பினர்.

குறுவை நெல் சாகுபடி 28 சதவீதம் குறைவு!

சென்னை, அக். 13 –

தமிழ்நாட்டில், 2025-26 ஆம் ஆண்டில், 130.23 லட்சம் மெட்ரிக் டன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், 122.43 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப் பட்டது. 2026-27 ஆம் ஆண்டு 79 லட்சம் மெட்ரிக் டன் நெல் உட்பட மொத்தம் 125 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏப்ரல்செப்டம்பர் மாத காரிஃப் பருவத்தில் நெல் சாகுபடி பரப்பளவு 28 சதவீதம் குறைந்துள்ளது; 2025ல்26ல் 17.5 லட்சம் ஹெக்டேராக இருந்த பரப்பளவு இந்த ஆண்டு 12.52 லட்சம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது. இது 4.98 லட்சம் ஹெக்டேர் சரிவாகும். மேட்டூர் அணை திறப்பதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் பருவமழை 30 சதவீதம் வரை பொய்த்ததும், காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்ததும் இந்தப் பெரும் சரிவுக்கு முக்கியக் காரணங்களாகும்.

சாகுபடி குறைந்ததன் காரணமாக மாநிலம் முழுவதும் உள்ள 4 ஆயிரத்து 400 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் 300 கோடி ரூபாய் மதிப்பிலான உரங்களும் விதைகளும் தேங்கியுள்ளதாக கூட்டுறவுத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காவல் நிலையத்திற்குள் புகுந்து

காவலர்கள் மீது தாக்குதல்!

த.வெ.க.வினர் அராஜகம்!

கோவை, அக். 13 -

கோவை மாவட்டம் சூலூர் காவல் நிலையத்தில், விசாரணைக்காக வந்தவர்கள் காவலர் கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கோவை மாவட்டம் சூலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சண்முகப்பிரியா என்பவர் புகார் ஒன்றை அளித்துள்ளார். அதில் தனது கணவர் ராம் பிரசாத், தனது படுக்கை அறை புகைப் படங் களை சமூக வலை தளத்தில் பரப்பி உள்ள தாகவும் அவரது குடும்பத்தினர் தன்னை வன்கொடுமை செய்த தாகவும் தெரிவித்தி ருந்தார்.

இந்த புகாரை விசாரித்த போலீசார், ராம் பிரசாத் மற்றும் அவரது தாயார் ஜெயந்தி, தந்தை கருப்புசாமி, தம்பி பிரகதீஷ் ஆகிய நான்கு பேர் மீது பெண் கள் வன்கொடுமை சட் டம் பிரிவு உள்ளிட்ட ஆறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து ராம்பிரசாத்தை விசார ணைக்கு அழைத்துள்ள னர்.

ராம்பிரசாத் காவல்நி லையம் வந்த போது, த.வெ.க. கொடி கட் டிய காரில் வந்து இறங் கிய சண்முகப்பிரியா வின் குடும்பத்தினர் திடீரென ராம் பிரசாத் மீது கொலை வெறி தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்கு தலை தடுக்க வந்த தலைமை காவலர் பாலமுருகன் மற்றும் பெண் காவலர் பிரியா மீதும் சண்முகப் பி ரி யா வி ன் குடும்பத்தினர் தாக்கு தல் நடத்தினர்.

இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய் துள்ள போலீசார், 2 பேரை கைது செய்த னர். தப்பியோடிய மேலும் 10 பேரை போலீசார் தேடி வரு கின்றனர்.

பண்டிகை காலம் நெருங்கும் நிலையில்

தமிழகம் முழுவதும் பருப்பு விலை கிடுகிடு உயர்வு!

கண்டுகொள்ளாத த.வெ.க. அரசு! மக்கள் கடும் அதிர்ச்சி!

விருதுநகர், அக். 13-

தமிழ்நாட்டில் பாசிப்பருப்பு, உருட்டு உளுந்தம்பருப்பு விலை உயர்ந்துள்ளது. பருப்புக்கு முக்கிய சந்தையாக கருதப்படும் விருதுநகர் மார்க்கெட்டில் விலை கிடுகிடு உயர்வால் தமிழகம் முழுவதும் பருப்பு விலை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. விருதுநகர் மார்க்கெட்டில் கடந்த வாரம் 15 கிலோ கடலை எண்ணெய் டின் ரூ.3,200க்கு விற்கப்பட்ட நிலையில் இந்த வாரம் டின் ஒன்றுக்கு ரூ.100 உயர்ந்து ரூ.3300க்கு விற்பனை யானது.

பாமாயில் கடந்த வாரத்தை விட இந்த வாரம் ரூ.20 குறைந்து டின் ஒன்று ரூ.2,280க்கு விற்பனை யானது. வரத்து குறைவு காரணமாக துவரம் பருப்பு 100 கிலோ நயம் கடந்த வாரம் ரூ.13,200 முதல் ரூ.13,400 வரை விற்ற நிலையில் இந்த வாரம் ரூ.300 உயர்ந்து, ரூ.13,500 முதல் ரூ.13,800 வரை விற்பனையானது. அதே போன்று, உருட்டு உளுந்தம் பருப்பு நயம் 100 கிலோ கடந்த வாரம் ரூ.9,100 முதல் ரூ.9,200 வரை விற்கப்பட்ட நிலையில் இந்த வாரம் மூட்டைக்கு ரூ.1,100 உயர்ந்து, ரூ.10,200 முதல் ரூ.10,400 வரை விற்பனையானது.

தொலி உளுந்தம்பருப்பு 100 கிலோ இந்த வாரம் மூட்டைக்கு ரூ.400 உயர்ந்து, மூட்டை ஒன்று ரூ.9,700 முதல் ரூ.9,900 வரை விற்பனை யாகிறது. பாசிப்பருப்பு 100 கிலோ மூட்டை, இந்த வாரம் அதிகபட்சமாக ரூ.1,500 வரை உயர்ந்து, ரூ.10,600 முதல் ரூ.11 ஆயிரம் வரை விற்பனையாகிறது. பட்டாணி பருப்பு கடந்த வாரம் ரூ.5,300க்கு விற்ற நிலையில், இந்த வாரம் ரூ.100 உயர்ந்து ரூ.5400க்கு விற்பனை யாகிறது.

பாசிப் பயறு நாடு 100 கிலோ மூட்டை ரூ.7,800 முதல் ரூ.8 ஆயிரம் வரை விற்கப்பட்ட நிலையில் இந்த வாரம் மூட்டைக்கு ரூ.700 உயர்ந்து, ரூ.8,500 முதல் ரூ.8,750 வரை விற்பனையாகிறது. மல்லி 40 கிலோ லயன் வகை ரூ.6,800க்கு விற்பனையான நிலையில் இந்த வாரம் மூட்டைக்கு ரூ.200 உயர்ந்து ரூ.7 ஆயிரத்திற்கு விற்பனை யானது. பிற அத்தியாவசிய உணவுப் பொருட்களான நல் லெண்ணெய், மிளகாய், காபி உள்ளிட்டவற்றின் விலையில் எந்தவித மாற்றமும் இல்லை. பண்டிகை காலம் நெருங்கும் நிலையில் த.வெ.க. அரசு கண்டுகொள்ளாத நிலையில் பருப்பு விலை கிடுகிடு உயர்வால் மக்கள் கடும் அதிர்ச்சியில் உள்ளனர்.

ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சுகாதார சீர்கேடுகள்!

சென்னை, அக். 13 -

சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சுகாதார சீர்கேடு கள் நிலவுவதாக பொது மக்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

வடசென்னையின் முக்கிய அரசு மருத்துவ மனைகளில் ஒன்றான ஸ்டான்லி மருத்துவம னைக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். அண் மைக்காலமாக இந்த மருத்துவமனையில் பாராமரிப்புப் பணிகள் முறையாக நடைபெறு வதில்லை.

மருத்துவமனையில் உள்ள மருந்துகள் வழங் குமிடம், மற்றும் உண வகத்தின் அருகே கழிவு நீர் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் அப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது.

உடல் உறுப்பு பிரிவு செயல்படும் பகுதி யிலும் கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற் பட்டுள்ளது. மேலும், மருத்துவமனையைச் சுற்றியுள்ள கழிவறை களில் தண்ணீர் வராத தால் நோயாளிகளும் பொதுமக்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளா கின்றனர்.

மேலும் மருத்துவ மனைக்கு சிகிச்சைக் காக வரும் நோயாளி களிடம் அங்கு பணிபுரி யும் ஊழியர்கள் பணம் கேட்பதாகவும் குறிப் பாக அங்கு பணிபுரியும் சிலர், தாங்களை த.வெ.க. உறுப்பினர்கள் எனக் கூறிக்கொண்டு, நோயாளிகளிடம் பணம் பறிக்க முயல்வ தாகவும், இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் பலமுறை புகார் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் நோயாளிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெரும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.